TAMIL INFORAMTION CENTRE
தமிழ் தகவல் நடுவம்

# மீட்சி

நவம்பர் 2008 தமிழ் தகவல் நடுவத்தின் மாதாந்த வெளியீடு இதழ்1

## மீட்சி பற்றி...

நீண்ட நாள் இடைவேளையின் பின்னர் லண்டனிலுள்ள 'தமிழ் தகவல் நடுவம்' என்ற அமைப்பின் மாத இதழான 'மீட்சி'யை மீண்டும் வெளிக்கொணர்வதில் மகிழ்ச்சியடைகிறோம்.

கடந்த பல தசாப்தங்களாக இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்கள், அரசியல் மறுப்புகள், மனித உரிமை மீறல்கள், அடக்குமுறைகள் ஆகியவையினால் பாதிக்கப்பட்டு வருகின்றார்கள். அவர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்படும் மிகப் பரந்தளவிலான துன்புறுத்தல்கள், சித்திரைவதைகள், படுகொலைகள், ஏதேச்சதிகாரக் கைதுகள், தடுத்து வைத்தல்கள், உயிர் உடமை அழிப்புகள், பாதுகாப்பற்ற நிலை ஆகியவை தமிழ் மக்கள் தொடர்ந்து எதிர்நோக்கும் பாரிய பிரச்னைகளாகும்.

இப்பிரச்னைகள் பற்றிய விழிப்புணர்வை தேசிய மட்டத்திலும், சர்வதேச மட்டத்திலும் ஏற்படுத்தி, அப் பிரச்னைகளிலிருந்து நிரந்தரமாக மீள்வதற்கான வழிவகைகளை உண்டாக்குதல் என்ற நோக்கில்; லாப நோக்கற்ற சமூக அடிப்படையிலான அமைப்பாக 'தமிழ் தகவல் நடுவம்' 1983ம் ஆண்டு ஜூலை மாதம் லண்டனில் நிறுவப்பட்டு, சென்னை, மதுரை ஆகிய இடங்களிலும் கிளைகளை அமைத்து செயலாற்றி வந்தது. ஜூலை 1987 ல் ஏற்படுத்தப்பட்ட இந்திய இலங்கை சமாதான ஒப்பந்தத்தை அடுத்து, அக்டோபர்; 1987ல் இந்நடுவம் மூடப்பட்டது. பின்னர், ஜூன் 1990ல் வடக்குகிழக்கில் ஆரம்பித்த போர்அனர்த்தங்களைத் தொடர்ந்து மறுபடியும் இந் நடுவத்தின் நடவடிக்கைகள் ஜனவரி 1991ல் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றன. தமிழ்பேசும் மக்களின் அரசியல் உரிமை, வாழும் உரிமை, சுதந்திரம், பாதுகாப்பு என்பனவற்றின் அடிப்படையிலான சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கக் கோரும் குறிக்கோளை உடைய சுயேட்சையான அமைப்பு இந் நடுவம்.

தமிழ்பேசும் மக்களது அரசியல் கோரிக்கைகளை சர்வதேச சமூகம் அறிந்து கொள்ளவும், அவற்றிகான

..அடுத்த பக்கம் பார்க்க



கொடை அளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க்கு ஒளி – (kural:390)

(கொடை, அருள், நேர்மையான ஆட்சி, தளர்ந்த குடிகளைப் பேணுதல் ஆகிய நான்கும் உடையவன். அரசர்களுக்கெல்லாம் விளக்குப் போன்றவன்)

The ruler who is generous, gracious, just and fostering care for the people's welfare is a shining light for others

# தமிழர் அடையாளமும் தமிழ்த் தேசியமும்



## தமிழர் அடையாளம்

தெற்காசியாவைச் சேர்ந்த நாடுகளில், தமிழ்நாடு அல்லாத மற்றைய நாடுகளின் பெயர்கள் அவர்கள் வாழும் நிலப்பரப்பின் குணாதிசயங்களையே அடையாளமாகக் கொண்டிருக்கின்றன. உதாரணமாக, கர்நாடகம் என்பது கரு+நாடு கரிய நிறம் கொண்ட மண்ணை உடைய நாடு; மலையாளம், மலை+ஆளம், மலைகளைக் கொண்ட நாடு, தெலுங்கு தேசம், திரி+லிங்க+தேசம், மூன்று லிங்கங்களைக் கொண்ட தேசம், மகாராஷ்டிரா, மகா+ராஷ்டிரா பெரிய இராச்சியம், பஞ்சாப், பஞ்ச+ஆப், ஐந்து ஆறுகளைக் கொண்டது என்று அவ்வவ் நாட்டு நிலப்பரப்புகளின் குணாதிசயம்களையே அடையாளமாகக் கொண்டுள்ளமையைக் காணலாம். ஆனால், தமிழ் நாடு என அழைக்கும்போது, தமிழ்+நாடு என்று அந் நிலப்பரப்பில் பேசப்படும் மொழியையே அங்கு பேசப்படும் தமிழ் என்ற மொழியின் அடையாளத்திலிருந்தே எழுந்திருக்கின்றது. தமிழ் மொழியிலிருந்தே தமிழர்கள் எனும் அடையாளமும் எழுந்தது.

இதன் காரணம் தமிழ் ஒரு உயர்தனி மொழி என்பதுடன் தொன்மையான மொழியும் ஆகும். தமிழும், 'பிராகிருதம்'(Prakrit) என்ற மொழியுந்தான் தெற்காசியாவில்; எழுத்து வடிவம் பெற்ற தொன்மை வாய்ந்த மொழிகளென்றும், சமஸ்கிருதம் இவற்றிற்குப் பின்தான்; தோன்றிய மொழியென்றும் கல்வெட்டுச் சாசனங்கள் உறுதிப்படுத்துகின்றன. பிராகிருதம் என்ற மொழியும் சமஸ்கிருதமும் பாவனை வழக்கில் இல்லாது அற்றுப் போய் தமிழ் இன்றும் வாழும் மொழியாக உபயோகத்தில் இருக்கின்றது.

தமிழ் மொழி இரண்டாயிரம் வருடங்களுக்கும் மேலான பாரம்பரியம் கொண்டது என்றும், தமிழின் பழமையான தொல்காப்பியம் எனும் தமிழ் இலக்கியம் கி.மு. 200 ஆண்டுகள் தொன்மை வாய்ந்தது என்றும், சங்ககால தமிழ் இலக்கியங்கள் இரண்டாம் நுலீற்றாண்டுகளில் படைக்கப்பட்டவை என்றும் மொழி ஆராய்சியாளர்களால் நிறுவப்பட்டுள்ளது. சமஸ்கிருதத்தின் தீவிர தாக்கம் இந்தியாவின் தெற்குப் பகுதியில் ஏற்படுவதற்கு முன்னரே, பல தமிழ் இலக்கியங்கள் வலுவான இலக்கியங்களாகத் தழைத்திருந்தமையினால், தமிழ்மொழி சமஸ்கிருதம் அல்லது மற்றைய தென்னிந்திய மொழிகளிலிருந்து காத்திரமான வேறு பாடுகளைக் கொண்டதாகவும், ஒரு தனித்துவமான இலக்கண, இலக்கிய அமைப்புகளைக் கொண்டதாகவும் இருக்கின்றது.

..அடுத்த பக்கம் பார்க்க

www.tamilarangam.net



# தமிழ்த் தேசியம்

'தேசியம்' என்ற பதத்தின் வரையறை காலத்துக்குக் காலம் மாற்றங்களுக்குள் உள்ளாகியிருக்கின்றது. ஒரு காலகட்டத்தில், 'தேசியம்' என்பது 'ஒரு அரசன் பால் செலுத்தப்படும் பூரண விசுவாசம்' எனக் கொள்ளப்பட்டது. பின்னர் அது 'ஒரு தேசத்தின்பால் விசுவாசம்' என்ற கருத்தைக் கொண்டதாகியது.

கடந்த 25 ஆண்டுகளாக, 'தேசியம்' என்ற பதத்திற்கு, அதன் அடையாளமாக, புதிய நெறிமுறைகள் வலியுறுத்தப்படுகின்றன. தேசியத்தின் அடிப்படைகளில், மொழி, சமயம், பொருளாதாரம், வரலாற்றுப் பாரம்பரியம் ஆகியவை உள்ளடங்கும். தேசியத்தில் 'பண்பாட்டு அடையாளம்' என்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது.

'பண்பாடு' என்ற தமிழ்ச் சொல்லும், 'கலாச்சாரம்' என்ற சமஸ்கிருதச் சொல்லும் ஒன்றையே குறிப்பிடுவதாக தமிழர்கள் பழக்கப்பட்டு விட்டார்கள். ஆனால், பண்பாடு வேறு, கலாச்சாரம் வேறு. பண்பாடு என்பது ஒரு மக்கள்தொகையின் கலைகள், நம்பிக்கைகள், நிறுவனங்கள் ஆகியவவை உட்பட்ட தலைமுறை தலைமுறையாக கையளிக்கப்பட்டு வரும் அவர்களது வாழ்க்கை நெறிகள்; கலாச்சாரம் என்பது கலைகள் ஆச்சாரம், அதாவது கலைகள் அவற்றை ஆற்றுவதற்காகக் குறிக்கப்பட்ட சடங்குகள் என்று சமஸ்கிருதத்தை அடிப்படையாகக் கொண்ட பதம்;. கலாச்சாரம் குறிப்பாக வரையறுக்கப்பட்டது. ஆனால் பண்பாடு,



மாற்றத்தையும், பேணிவளர்த்தலையும் கொண்டது. சங்கீறிதம், உடை, திரைப்படங்கள் மட்டுந்தான் பண்பாடு என்று ஒரு குறுகிய அம்சங்களுக்குள் அதனை அர்த்தப்படுத்திக் கொள்வது தவறானது.

பண்பாடு என்பதன் விரிவுபடுத்தப்பட்ட வரையறுகளுக்குள் கீழ்க் குறிப்படப் பட்டிருக்கும்; சிலவும் அடங்கும் என இப்பொழுது கொள்ளப்படுகின்றது:

- தாராள ஜனநாயகம் (Liberal Democracy )
- சர்வசன வாக்குரிமை(Universal Franchise)
- மனித உரிமைகள்(Human Rights)
- தனிநபர்சொத்துடைமை (Individual Property Ownership)
- தனிநபர் பண்பாட்டு (Individual Cultural Rights)
- பால் விடயங்கள்(Gender Issues)
- சுற்றுச் சூழல் கவனிப்பு (Care for Environment)
- வளர்ச்சி(Development)

பண்பாடு, காலத்தின் போக்கில் மாறுதல்கள் அடையும். உதாரணமாக, ஒரு காலகட்டத்தில் மேற்கத்தைய தேசங்களில் விவாகரத்து என்பது பண்பாட்டுக்கு முரணானது என்று கருதப்பட்டு தீவிரமாக எதிர்க்கப்பட்டது. ஆனால், இப்பொழுதோ அது ஒரு பண்பாட்டு உரிமை என ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

தேசியக் கோரிக்கைக்கு அடிப்படையான பண்பாட்டு வளர்ச்சிக்கு கீழ்க் கண்டனவும் உள்ளடங்கும் என்பதினை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்:

- போதுமான உணவு (Food Sufficiency)
- நல்ல ஆரோக்கியநிலை(Good Health)
- சமூக சமத்துவம்(Social Equality
- பால் சமத்துவம்(Gender Equality)
- பண்பாட்டுச் சுதந்திரம்(Cultural Freedom)

மேற் கூறியவற்றுடன், சர்வதேச நாடுகளில் எங்கள் பங்கு காத்திரமாக இருப்பதற்கு, உலக வளங்களில் ஒரு சிறிய பகுதியாவது எமது கட்டுப்பாட்டில் இருப்பது அவசியமாகும். ஒரு சமூகத்தின் முன்னேற்றத்திற்கு ஒரு அரசியல் தீர்வு மட்டம் போதுமானதாக அமையாது. எமக்கு இப்பொழுது மூலதனங்கள் இல்லை. ஒரு அரசியல் தீர்வை வலுவாக்குவதற்கு, அவர்களுக்கு வேண்டிய வளங்களில் சிலவற்றுக்காகவாவது, ஒரு சிறிய அளவிலாவது, சர்வதேசங்கள் எம்மில் ஓரளவு தங்கியிருப்பது சர்வதேச அரங்கில் எமது செல்வாக்கிற்கு அவசியமாகிறது. இத் தலைமுறையில் இல்லாவிட்டாலும், அடுத்த தலைமுறைகளிலாவது இந்த நிலைமை ஏற்படுத்துவதற்கு நாம் முயற்சிகள் எடுக்க வேண்டும். உதாரணமாக, சர்வதேச அரங்கில் இஸ்ரேல் ஏற்படுத்தக்கூடிய தாக்கத்தின் சூட்சுமம் சர்வதேசநாடுகளின் வளங்களில் அவர்களின் கணசமான பங்குதான் என்பது நாம் தெரிந்து கொள்ள வேண்டும். எனவே, நாமும் அதனை நோக்கி எம்மை வளப்படுத்திக் கொள்வதும் எங்களது தேசியக் கோரிக்கைக்கு அவசியமாகின்றது.

**இந்த ஆக்கம், 11 மே 2008ம் திகதி, 'தமிழ் தகவல் நடுவத்தில்' மேற்குறிப்பிட்ட தலைப்பில் நடைபெற்ற கூட்டத்தில் கலாநிதி ரகுபதி அவர்கள் தெரிவித்த கருத்துக்களின் குறிப்புகளிலிருந்து தொகுக்கப்பட்டது.**

**கலாநிதி ரகுபதி இந்தியாவின் ஒரிசா மாநிலத்திலுள்ள பண்பாட்டுக்கான** Utkal University of Culture **முதுகலை கல்விப் பீடத்தின் தலைவராகவும், தெற்காசிய கற்கையின் பேராசிரியராகவும் பணியாற்றியுள்ளார். அவர் தனது ஆராய்சிக்கு எடுத்துக்கொண்ட பல விடயங்களுள், தெற்காசிய வரலாறு, தொல்பொருள், கல்வெட்டு. பண்பாடு, சமயங்கள் தமிழ் கற்கை, சோதிடம் ஆகியவைகளும் அடங்கும். 1973ம் ஆண்டு தொடங்கி, பதினைந்து நூல்களையும், ஆங்கிலத்திலும் தமிழிலும் பல சஞ்சிகைகளையும், எழுதியும் பதிப்பித்தும்** வெளியிட்டுள்ளார்.

## முன்பக்க தொடர்ச்சி

அங்கீகாரங்களைப் பெறவும், மனித உரிமைகள் பாதுகாக்கப்படவும், மதிக்கப்படுவதற்கும் பேணுவதற்கும், அவற்றைப் பற்றி சமர்ப்பிக்கப்படும் தகவல்கள், சாதனங்கள்; உண்மையானதும், நம்பகத்தன்மை வாய்ந்தனவாகவும் இருத்தல் இன்றியமையாததாகும். எனவேதான், 'முனைப்பான செயல்பாடுகளுக்கு தவறற்ற தகவல்தான் அடித்தளம்' என்ற நிலைப்பாட்டில் 'தமிழ் தகவல் நடுவம்' ஒரு தகவல் களஞ்சியமாக இயங்கி வருகின்றது.

இந் நடுவம், மனித உரிமை பற்றிய ஆய்வுகளிலும் வெளியீடுகளிலும் ஈடுபட்டு வருகின்றது. உலகளாவிய மனிதஉரிமை தொடர்புச் சாதனங்களின் ஓர் அங்கமாகவும் நடுவம் திகழ்வதோடு, இலங்கையில் மனிதநேய, மனிதஉரிமை விடயங்களில் ஈடுபடுபவர்களின் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் உதவி வருகின்றது. அத்துடன், இலங்கை நிலவரம் சம்மந்தமான விபரங்களை அகதிகள் சம்பந்தப்பட்ட ஸ்தாபனங்களுக்கும் அகதிகளுக்கும், அகதி அந்தஸ்து கோருவோருக்கும் அளித்து உதவி வருகின்றது.

இலங்கையின் இனப் பிரச்னைக்கு ஒரு நியாயமானதும் நிரந்தரமானதுமான தீர்வுக்கான முயற்சிகளுக்கு வேண்டியவற்றிற்கான உதவிகளையும் நடுவம் செய்து வருகிறது.

இலங்கை மக்கள் எப்பகுதியில் வாழ்ந்தாலும் சகல பகுதிகளிலும் ஐக்கிய நாடுகள் சபையின் கோட்பாடுகளின் பிரகாரம் அவர்களது சமூக, அரசியல், கலாச்சார, பொருளாதார, மனித உரிமைகள் அளிக்கப்பட்டு, சமாதானமாகவும், ஸ்திரமாகவும், இணக்கமாகவும், பாதுகாப்பாகவும் வாழ வேண்டும் என்பதில் நடுவம் அக்கறை கொண்டுள்ளது.

தமிழர்களின் வரலாறு, பண்பாடு, சமகால அரசியல் ஆகியவற்றைப் பற்றிய மற்றையோரின் புரிந்துணர்வுகளை மேம்படுத்துவதற்கான தகவல்களை வழங்குவது, இவை பற்றிய ஆராய்ச்சிகள், கருத்துப் பரிமாற்றங்கள், சமூக நடவடிக்கைகள் ஆகியவற்றிற்கான வசதிகளையும் தமிழ் தகவல் நடுவம் ஏற்படுத்திக் கொடுத்து வருகின்றது.

இலங்கைத் தமிழ்பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமைகள், போர்அனர்த்தங்களினால் இடம் பெயர்ந்தோரின் அவலமான வாழ்க்கை நிலை, இன விரோத சக்திகளின் மனித உரிமை மீறல்கள், சாதியின் பெயரால் நடக்கும் அடக்கு முறைகள், பெண்களின் உரிமை மறுப்பு, பெண்கள் நலன், புலம் பெயர் நாடுகளில் சமகால சமுதாயப் பிரச்னைகள், அகதிகளின் உரிமைகள், அகதிகள் கல்வி, அகதிகள் வேலை வாய்ப்பு, உடல், உள ரீதியான நோய்கள், முதியோர்கள் நலன் ஆகியவற்றிற்கான தீர்வுகளைப் பற்றிச் சிந்தித்து, அறிவார்த்தமான முடிவுகளுக்கு வந்து அவற்றை கூட்டாகச் சேர்ந்து செயற்படுவதும் நாம் ஆற்ற வேண்டிய எமது தலையாய கடமைகள்.

இலங்கையிலும் மற்றைய நாடுகளிலும் வாழும் தமிழ் பேசும் மக்களை எதிர்நோக்கும் பிரச்னைகளைப் படித்தும், அறிந்தும், ஆய்ந்தும், சிந்தித்தும், விவாதித்தும், அவற்றிற்கான வெளிச்சமும், விடிவும் காண்பதற்கான கருத்துக்கள், எண்ணங்கள், யோசனைகள் ஆகியவற்றின் அரங்காக 'மீட்சி' மிளிர வேண்டும் என்பது எமது விருப்பு.

அனைத்து நாடுகளிலும் வாழும் இலங்கையைச் சேர்ந்த தமிழ் பேசும் மக்களினைப் பாதிக்கும் சகல விடயங்கள் குறித்து கூட்டுச் சிந்தனைக்கான களத்தினை வழங்குவதும், பரஸ்பரம் கருத்துப் பரிமாறல்களை வெளிக் கொணருவதும், ஊக்குவிப்பதும், 'மீட்சி'யின் நோக்கமாகும். எமது உரிமைகளை, உடமைகளை, மண்ணை, மரபுகளை, பண்புகளை, பாரம்பரியங்களை, கலைகளை, கலாச்சாரங்களை மீளப் பெறுவதற்கும், பேணுவதற்குமான குரலாக 'மீட்சி' முன்னெடுக்கப்படும்.

'மீட்சி'யில் வெளிவருபவனவற்றைப் படித்து, உங்களுடைய கருத்துக்களை தெரிவிப்பதோடு, உங்களது பயனள்ள படைப்புகளையும் நல்கி, மீட்சி'யை மேம்படுத்தம்படி பணிவன்புடன் கோருகிறோம். நமது மக்களின் நலனுக்காக நாம் உழைக்கும் ஒவ்வொரு நாளும், நமக்குப் பெருமை தரும்! நிறைவு தரும்!!

M R LAWS SOLICITORS
Incorporating Ranjith & Co.
180 Mitcham Road, Tooting, London SW17 9NJ
WE CARRYOUT ALL TYPES OF LEGAL WORK
Tel: 020 8767 9717 / 020 8672 3447 Fax 020 876 9684 DX: 58860 Tooting South
Email : mrlawssolicitors@yahoo.com
This firm does not accept service via email. This firm is regulated by the Law Society

# இலங்கையில் வெள்ளை வான் கடத்தல்



## அரங்கம் 2

**சோமு:** ஐயா! என்ன இலங்கையில வெள்ளை வான் கடத்தல் மிக மோசமாக நடக்குதாமே. ஒவ்வொரு நாளும் வயது, வட்டி, ஆண், பெண், காலநேரம் பாராமல் வெள்ளை வானிலை வந்து வீடுகளிலிருந்து, பள்ளிக்கூடங்களிலிருந்து, கடைகளிலிருந்து, வேலை ஸ்தலத்திலிருந்து, கடத்திக்கொண்டு போயினமாமே? ஆட்கள் பலரைக் காணவுமில்லையாமே? இதென்ன கொடுமை! இதென்னப்பா நடக்குது?

**நரேன்:** இதென்ன புதுக்கதை சொல்லுறீங்கள். வெள்ளை வான் கடத்தல் என்ன புதுசா தமிழனுக்கு? ஏன் எங்கட இயக்கங்கள் கடத்தவில்லையா? அவன் ராசையாவின்டை பெடியன், குமரப்பாவின்ட தாய் மாமன், ஏன் சரசக்காவையும் எல்லாம் கொண்டுபோய்த் தொலைச்சாங்கள். பழசுகளை மறந்திட்டீரோ அல்லது மறைக்கப் பாக்கிறீரோ?

**கருணை:** எனக்குப் பாக்க, இது சும்மா விதண்டாவாதம் மாதிரியிருக்கு. அங்க சனம் 5/6 மணிக்கெல்லாம் வீட்டைப் பூட்டிக் கொண்டு, ஆரும் கதவைத் தட்டப் போறாங்களோ எண்டு பயந்தபடி இருக்குது. கடத்தின சனத்தைக் காணவில்லை எண்டு பெற்றார். பொலிஸ் ஸ்டேசன் ஸ்டேசனாய் அலைந்து திரியுதுகள். இதைவிட லட்சம், கோடியெண்டு கடத்தல்காரர் கேக்கிற காசைக்கொடுக்க ஏலாமல் பலர் இருக்கினம். காசைக் கொடுத்து ஏமாறித் தவிக்கினம் கனபேர். கையைக் காலைக் கட்டிப்போட்ட உடம்புகள் ரோட்டில, கடலில, தண்டவாளத்தில, பூங்காக்கில எல்லாம் கிடக்குதாம் எண்டு கேள்விப்பட்டு பெற்றார் படும்பாடு கொஞ்ச நஞ்சமில்லை.

**சோமு:** ஏன் தலைகால் இல்லாமல் முண்டமாகவும் வீசிக்கிடக்குதாமே. இது என்ன அநியாயம்! இதைக்கேட்க ஆருமில்லையா? என்ன ஐயா! நீங்கள் சும்மா பேசாமல் இருக்கிறியள், ஏதும் சொல்லுங்களேன்?

**ஓரம்:** நீங்க இப்ப கதைச்சுக் கொண்டிருப்பது, ஒரு சின்ன விடயம் அல்ல. இது இயக்கங்களும் செய்ததுதான் என்று சும்மா இருக்கிற காலமும் இல்லை. அந்த வெள்ளை வான் கடத்தலில அரசுக்கு என்ன சம்பந்தம் இருக்கிறது என்பதுதான் முக்கியம். ஒரு அரசை சும்மா ஆயுதக் குழுக்களுடன் ஒப்பிட்டு பார்க்க இயலாது. மக்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு உண்டு. இலங்கை தன்னை ஒரு ஜனநாயக நாடாகக் காட்டிக் கொள்ள விரும்புகிறது. ஜனநாயக அரசு என்பது தனியாக மக்கள் ஆதரவில் வாக்களித்துத் தெரிவு செய்யப்பட்டது என்பதில் மாத்திரம் தங்கியிருப்பதல்ல. அதன் நடவடிக்கைகள், அரசியற் கட்டமைப்புக்கள், அவற்றின் செயற்பாடுகள், மனித உரிமைகளை பேணுவதில் அதன் நிலை, உலக சமுதாயத்தின் அங்கீகாரம் எனப் பல விடயங்களில் தங்கியுள்ளது.

அப்படியாகத் தன்னை ஒரு ஜனநாயக நாடாகக் காட்டிக் கொள்ள விரும்பும் அரசின் அங்கமான CID பொலிஸ், ராணுவம், நேவி அங்கத்தவர்கள், ஆட்கடத்தல் போன்ற மனித உரிமை மீறல்களில் ஈடுபடும்போது, அது வன்மையாகக் கண்டிக்கப்பட்டு சம்மந்தப்பட்டவர்கள் இனங்காணப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும்.

இவ்விடயத்தில் பொலிஸ்மாஅதிபர் (IGP) ஆர்வமற்று இருப்பதும், உடன் நடவடிக்கை எடுக்காதிருப்பதும், நாட்டில் சட்ட விதி முறைகள் குலைந்து விட்டதையே காட்டுகின்றது. மேலும், நாட்டின் பாதுகாவலர்கள் ஆட்கடத்தலில் ஈடுபடுதல் தமிழ் மக்களை மிகவும் பாரதூரமான சூழ்நிலைக்குள் தள்ளியுள்ளது. பலர் மனநிலை தொடர்ந்தும் பாதிக்கப்படுகின்றது. இது இன அழிப்பு வழி முறை அம்சங்களில் ஒன்று என இது சம்பந்தப்பட்ட அறிஞர்கள் கூறுகிறார்கள்.

**நரேன்:** அப்ப கடத்திக் கொண்டு போய், சித்திரவதை செய்து, கொலை செய்த இயக்கங்களை சும்மா விடலாமென்று சொல்கிறீர்களா? இதென்ன நியாயம்?

**கருணை:** கொஞ்சம் பொறு. கொலை செய்கிறவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் இங்கு ஒரு கருத்து முரண்பாடு இல்லை. இண்டைக்கு காலம் மாறிட்டுது. உலகம் மாறிட்டுது. காலப் போக்கிலே பல விடயங்கள் வெளிக்கும். கொலை செய்து விட்டு வெளியாலை தஞ்சம் கேட்டு ஓடிப் போனவர்கனின்ர கதைகளை அறிந்தால் தெரியும். ஐயா என்ன சொல்கிறார் என்றால், மக்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பைக் கொண்ட ஒரு அரசு தனது பாதுகாப்புக் கடடுமானங்களைப் பயன்படுத்தி ஆட்களைக் கடத்துவது, சட்ட திட்டங்களுக்கு அப்பாலான ஒரு பயங்கரவாதச் செயல் என்பதுதான் இங்கு முக்கியம். அக்கடத்தல் செயலுக்கு முழுப் பொறுப்பையும் அரசுதான் எடுக்க வேண்டும். அமைச்சர் கோதபய ராஜபக்ஸ, சட்ட ஒழுங்கிற்கு பொறுப்பாயிருக்கிறார். பொலிஸ்மாஅதிபர் ஜயன்த விக்கிரமரட்னா, இராணுவ தளபதி மேஜர் சரத் பொன்சேகா, ஏன் ஜனாதிபதி ராஜபக்ஸ கூட பொறுப்புடையவர்கள் ஆவார்கள். இது மட்டுமில்லை. கடத்தப்பட்ட ஆட்கள விடுவிக்கிறத்துக்காக, உறவினா;கள் கொடுக்கிற காசு ஒரு குறிப்பிட்ட வங்கி அக்கவுண்டுக்குத்தான் போகுதாம். இதுவரை இந்த அக்கவுண்ட் விசாரணைக்கு உள்ளாக்கப்படவில்லை. அரசுக்கு கடத்தல்களில் சம்பந்தம் உண்டு என்கிறத இது தெளிவாக் காட்டுது.



**சோமு:** கருணை சொல்வதிலும் ஒரு நியாயம் இருக்கத்தான் செய்யுது. வெள்ளை வானில் போறவர்கள், பல விதமான வேடங்களில் போறாங்களாம். சிலர் பொலிஸ் உடுப்பில், சிலர் ஆமி அல்லது நேவி உடுப்பில். ஆயுதந் தாங்கிய சீருடையில் நாங்கள் CID, TID பொலிஸிலிருந்து வந்திருக்கிறம் எண்டு சொல்லுகினமாம். மேலும் சிலர் அடாவடித்தனமாக இருப்பிடங்களை உடைத்துக் கொண்டும் போய், பேர் சொல்லிப் பலாத்காரமாய் இழுத்துக் கொண்டு போகினமாம். அதுவும் பட்டப் பகலில், மக்கள் பாதுகாப்புக்கென்று போட்ட சென்ரிகளையும் கடந்து வந்து கொண்டு போறதென்றால், இதென்ன சேட்டை? இதுக்கு வேற யார் பொறுப்பு?

**ஓரம்:** ஒரு அரசாங்கம் நாட்டு எல்லைகளையும், மக்களையும் பயங்கரவாதிகளிடமிருந்து பாதுகாக்கவே சில கடும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டியுள்ளது என்று கூறுவதைத் தடுக்க முடியாது. ஆனால், தடுப்பு நடவடிக்கைகள் எப்படியாக இருக்க வேண்டும் என்பதுதான் இங்கு முக்கியம். இன்றைய சூழலில் அரச பாதுகாப்பு பிரிவினர், ஒரு நபரைச் சந்தேகப்பட்டால், தகுந்த ஆதாரங்களுடன் அவரை விசாரிப்பதற்கு முழு உரிமை உண்டு. எப்படி விசாரணைக்குட்படுத்த வேண்டுமென்று கூட விதிகள் உண்டு. ஆனால் வாகன இலக்கத் தகடுகள் அற்ற, அல்லது பொய்யான தகடுகள் பொருத்தப்பட்ட, அதுவும் தனியார் வாகனத்தில் சென்று பொய்யான அடையாள அட்டைகளைக் காட்டிப் பயமுறுத்தி மனைவி, குழந்தை குட்டிகள், பெற்றார், அண்ணை, தங்கைமார், அயலவர், சினேகிதர் கதறி அழ, எங்கு அழைத்துச் செல்லப்படுகின்றார் என்று கூறாமல் பலாத்காரமாகக் கடத்திச் செல்வதை ஏற்க முடியாது.

அழைத்துச் செல்லப்படுபவர்களில் பலர் இறுதியில் TID முகாங்களிலும், தடுப்பு முகாம் போன்ற இடங்களிலும் சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள் என்பதும் உண்மை. பெற்றார், உறவினர்களைக் கூட சந்திக்க அனுமதி மறுக்கப்படுகின்றது. இவர்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் சட்டத்தரணிகள் கொலை மிரட்டல்களுக்கு உட்படுத்தப்படுகின்றனர். இதனால் வழக்குகள் எடுக்க சட்டத்தரணிகள் பின்வாங்கும் நிலை அதிகரிப்பதைக் காணக் கூடியதாக உள்ளது.


**நரேன்:** இந்த விடயத்தில் அரசோடு இயங்கும் தமிழ்க் குழுக்களுக்கும் கூட்டாமே?

**கருணை:** அவர்கள் அரசோடு இயங்கிறபடியாலோ, அல்லது தமிழ், சிங்களம், முஸ்லிம் என்றது இங்க பிரச்சனையில்லை. அவர்களது செயல்களுக்கும் பொறுப்பை அரசுதான் ஏற்க வேண்டும். இதனை நாங்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.

**சோமு:** ஐயா! உண்மையைச் சொல்லுங்கோ. வெள்ளை வான் கடத்தல் ஒரு சீரியஸ் பிரச்சனையா அல்லது இதுவும் கைது செய்து தடுத்து வைப்பது, பிறகு NO Date என்ற தந்திரத்தைப் பாவித்து நீதிமன்றத் தீர்ப்புக்களை தள்ளிப் போடுவது என்று காலம், காலமாக நடக்கின்ற விடையத்தைத்தான்கதைத்துக் கொண்டிருக்கிறமா? இப்ப எத்தனை பேர் வெள்ளை வானால் கடத்தப்பட்டிருக்கினம், இவர்கள் எங்கை இருக்கினம், யார் கடத்துகினம் என்ற விடயங்கள் ஆருக்கும் தெரியுமா? இல்லை என்றால் இதுவும் மதவுக் கதைதானா?

**ஓரம்:** எவ்வளவு பேர் கடத்தப்பட்டுள்ளார்கள் என்ற சரியான தகவல் கூறுவது கடினம். ஆனால் TICயினர் ஏறத்தாழ 2007:2008 ஆண்டிற்கு 250 மதிப்பீடு இருப்பதாக கூறுகிறார்கள். ICRC 2006ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் தமக்கு 350 அறிவுப்புக்கள் கிடைத்ததாகவும் SHRC தம்மிடம் 419 பதிவுகள் டிசம்பர் 200இலிருந்து செப்டெம்பர் 2006 வரை இருப்பதாகவும் கூறுகிறார்கள். TICயினரின் தகவல்படி கடத்தப்படுபவர்களில் பெரும்பாலோர் தமிழர்கள். மற்றும் சில சிங்கள முஸ்லிம் இனத்தவர்களும் உண்டு. கடத்தப்படுபவர்களின் விபரங்கள் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவிற்குத் தெரிய வந்திருப்பதால் அல்லது கடத்தல் விபரங்கள் மனித உரிமை ஸ்தாபனங்களின் சட்டத்தரணிகள் கையில் கிடைத்திருந்தால், கடத்திய பாதுகாப்புத் தரப்பினர் கடத்தியோரை பொலிஸில் ஒப்படைக்கும் நிலை உருவாகுகின்றது. இதில் பலர் எல்.ரி.ரி என்ற சந்தேகத்தில் கடத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. ஆனால், இவர்களுக்கும் எல்.ரி.ரியினருக்கும் தொடர்புகள் உண்டா என்பதில் சில பொலிஸ் உட்பட பலருக்கு சந்தேகங்கள் உண்டு. விசாரணைகளுக்குப் பின் தொடர்புகள் இல்லை என்று விடுவிக்கப்பட்டவர்களும் உண்டு. தடுப்புக்காவலில் இருப்பவர்களில் வெளிநாடு செல்ல கொழும்பு வந்த இடத்தில் கடத்தப்பட்டவர்கள், வெளிநாடுகளில் இருந்து பல காரணங்களுக்காக இலங்கைக்குப் பயணித்தவர்களும் உள்ளடங்குவர். மலையக மக்கள் பலர் கடத்தப்பட்டுள்ளாலீ;கள்.

ஓரம்போகியார்



அய்யா சேதி என்ன?

வெள்ளை வான் கடத்தல் பற்றி அரசிடம் உலக நாடுகள் வினவும் போது இத்தகைய கடத்தல்கள் நடை பெறுவது உண்மை, நாங்கள் விசாரணை நடத்துகின்றோம் என்று கூறுகிறார்களே தவிர கடத்தல்காரர்களைத் தண்டிக்கவோ அல்லது இப்படியான சம்பவங்கள் மேலும் நடக்காது பார்ப்பதற்கு முயற்சி எடுக்கவோ முன் வருகிறார்கள் இல்லை.

TICயினரால் ஆதாரபூர்வமாக யார், எப்போ, எங்கே, யாரால் கடத்தப்பட்டுள்ளார் என்ற பெயர் விபரங்கள் கடத்திய இராணுவ பொலிஸ் அதிகாரிகளின், படிநிலைக் குறிகள், கடத்தப்பட்டவர்கள் தற்போது எங்கே வைக்கப்பட்டுள்ளார்கள், அவர்களுக்கு என்ன நடந்தது என்ற விபரங்களைக் கூடப் பட்டியலிட்டு அரசிடம் கையளித்திருப்பதாக கூறப்படுகின்றது. விளைவு என்னவோ காலப் போக்கில்தான் தெரியும்.

**சோமு:** அது காணுமே! இதற்கு மேலே என்ன கிடக்கு செய்யிறதுக்கு. எல்லாம் அம்பலத்திற்கு வந்திட்டதே.

**கருணை:** அவையள் செய்யினம், இவையள் செய்யினம் என்று இருக்காமல் நாம் ஒவ்வொருவரும் என்ன செய்யிறம் செய்ய வேண்டி இருக்கு என்று சிந்திக்க வேண்டும் என்பது என்ரை கருத்து. நரேன்! நீ என்ன நினைக்கிறாய்?

**நரேன்:** எனக்கென்னவோ பழைய விசயங்களை விட்டிடு எண்டு சொல்லிற மாதிரி இருக்குது. உனக்குத் தெரியாது கஜன, முருகேசு, கயல்விழி, கிச்சு...... இப்படியெல்லாம் பட்டியலிட்டுப் போகலாம். எத்தனை பேரைக் கடத்திக் கொண்டாங்கள். எத்தனை உடம்புகள் எங்கெங்கை தாட்டுக் கிடக்கோ. தமிழீழம் கிடைத்த பிறகுதான் இருக்கு.!

**கருணை:** தமிழீழம் கிடைக்கும் வரைக்கும் நரேன் இருக்கட்டும். ஐயா! நாங்கள் இப்ப என்ன செய்யலாம் நீங்கள் சொல்லுங்கோ!

**ஓரம்:** ஒரு முக்கிய விடயம் எங்களுக்கு செய்யக்கிடக்குது. முதலாவது, யாராவது ஒருவருக்குத் தெரிந்த ஒருவர் இலங்கையில் இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியில் கடத்தப்பட்டிருந்தால், உடனடியாக கடத்தல் சம்மந்தமான முழுத் தகவல்களையும் திரட்டல் வேண்டும். தகவல்கள் உண்மையாக இருக்க வேண்டும். இரண்டாவதாக, கிடைத்த தகவல்களை TICயினரிடம் தொடர்பு கொண்டு எப்படிப் பயன்படுத்தலாம் என்பதை ஆராய வேண்டும். மூன்றாவதாக, உடனடியாக சம்பவம் தொடர்பான விடையத்தைப் பின்வருபவர்களுக்கு கடிதம் மூலம் அறிவிக்க வேண்டும்: Secretary, Ministry of Defence, Public Security, Law and Order, Fax: 0094 11 2 446300/421529; Mr Victor Perera, IGP, Fax: 0094 11 2440440; Mr Mahinda Rajapakse, President, Fax: 0094 11 2472100.

நான்காவதாக, கடிதத்தின் பிரதி ஒன்றை உங்கள் பாராளுமன்ற உறுப்பினருக்கு அனுப்பி, இது சமமந்தமாகப் பேசுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குமாறு வேண்டுதல் விட வேண்டும். சந்தர்ப்பம் கிடைக்குமிடத்து, அவரைச் சந்தித்து, பிரித்தானிய அரசு மூலம், இலங்கை அரசிடம் இது பற்றிக் கேட்டு விடை தருமாறு வற்புறுத்தல் வேண்டும். அப்படிச் சந்திப்பதற்கு முன்னால் TICயுடன் தொடா;பு கொண்டு தேவையான தகவல்களையும், ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்வது நல்லது. மேலும், இவ்விடயத்தில் அக்கறை காட்ட விரும்புவோர், கடத்தப்பட்டவர்களின் விபரங்கள் தெரியாவிடின், TICயினரிடம் தொலைபேசி இலக்கம் 020 8546 1560 மூலம் தொடர்பு கொண்டு கடத்தப்பட்டவர்களின் பட்டியலில் உள்ள ஒருவருக்காக மேலுள்ளபடி குரல் கொடுக்க முன்வரலாம்.

**சோமு, கரன்:** ஐயா கூறியடி உடனடியாக வேலையைத் தொடங்குவோம்.

**நரேன்:** சரி, எனக்கும் ஒரு பேர் தாங்க. நானும் உங்களோடு களத்தில் இறங்கிறன்.

www.tamilarangam.net



# A responsible intervention by India is needed for effective solution in Sri Lanka

Civil society and Diaspora activists are deeply disappointed with the India's position when the crime of genocide is being perpetrated against the Tamil speaking people in Sri Lanka and the deteriorating situation demands a robust intervention. There is clear evidence of racially motivated discrimination and a policy of dehumanization have denied a whole group of people their dignity, legitimate rights and the opportunity for equality for over several decades. India is well placed, by virtue of its cultural, economic and social ties with Sri Lanka for millennia, more than any other country, to protect the minorities from extreme abuse and help to resolve the conflict in the neighbouring island – "A responsible role" is the, expression used by many people who contacted the Tamil Information Centre (TIC), after the Joint Press statement issued in New Delhi following Sri Lankan President Mahinda Rajapaksa's brother and Special Adviser Basil Rajapakse's meeting with India's External Affairs Minister Prnab Mukherjee, National Security Adviser M K Narayanan and Foreign Secretary Sivshankar Menon on 26 October 2008.

The two major factors that continue to influence India's relations with Sri Lanka are security in the region and the shared ethnicity of Tamils living in southern India and in the northeast and plantations of Sri Lanka. This position is reflected clearly in the Indo-Sri Lanka Joint Press statement.

Since withdrawal of the British military presence in the Indian Ocean in the mid-1950s, both nations have increasingly shared regional security interests, and the position continues to this day. In the 1970s, New Delhi and Colombo enjoyed close ties on the strength of the relationship between Indira Gandhi and Sri Lanka's Prime Minister, Mrs. Sirimavo Bandaranaike. India continued to take an interest in the status of the Sri Lankan Tamils, but without the direct intervention that characterized the 1980s. The complex issues involved in the direct intervention of India, by sending a peacekeeping force in 1987, marred relations between the two countries. Bilateral relations, however, improved somewhat in the early 1990s, as the governments attempted to expand economic, scientific, and cultural cooperation. The May 1991 assassination of Rajiv Gandhi and the attack on EPRLF leaders in June 1990 in the Indian soil, forced New Delhi to crack down on the LTTE presence in Tamil Nadu and to institute naval patrols in the Palk Strait to interdict LTTE movements to India. The hands-off approach by India and Tamil Nadu after the Rajiv assassination continued into the new millennium, but the intensity of the war since 2006 and the extreme human suffering in north-east Sri Lanka have seen a change of heart, and a call from Tamil Nadu for robust intervention.

The joint statement completely ignores the first two demands put forward by Tamil Nadu, namely, stopping the war and suspending military aid to Sri Lanka and has considered action only in relation to humanitarian aid to the Vanni region. This is not what is required from India, says Mano Ganeshan, MP and leader of the Western People's Front (WPF).

The Joint Press Released in Delhi on 26 October 2008 states -

"Keeping in mind the close bilateral relations between India and Sri Lanka, President of Sri Lanka Mahinda Rajapaksa sent as his Special Envoy Honourable Basil Rajapaksa, Member of Parliament and Senior Advisor to the President of Sri Lanka to visit New Delhi, on 26th October 2008. During his visit, the Sri Lankan Special Envoy held discussions with External Affairs Minister, National Security Advisor and Foreign Secretary.

"The Indian side appreciated deeply the initiative of President Mahinda Rajapaksa to send his Special Envoy. The discussions were positive and constructive and centered around a range of issues.

"India conveyed its concern at the humanitarian situation in the northern part of Sri Lanka, especially of the civilians and internally displaced persons caught in the hostilities and emphasised the need for unhindered essential relief supplies. Mr. Rajapaksa briefed the Indian authorities of the efforts by the Sri Lanka Government to afford relief and ensure the welfare of the civilian population in the North. He assured that the safety and wellbeing of the Tamil community in Sri Lanka is being taken care of.

"As a gesture of goodwill, India has decided to send around 800 tonness of relief material to Sri Lanka for the affected civilians in the North. The Government of Sri Lanka will facilitate the delivery. Both sides agreed to consult and cooperate with each other in addressing these humanitarian issues.

"Both sides discussed the need to move towards a peacefully negotiated political settlement in the island including in the North. Both sides agreed that terrorism should be countered with resolve. The Indian side called for implementation of the 13th Amendment and greater devolution of powers to the provinces. Mr. Basil Rajapaksa emphasized that the President of Sri Lanka and his Government were firmly committed to a political process that would lead to a sustainable solution.

"Both sides agreed to further nurture the democratic process in the Eastern Province. Mr. Rajapaksa briefed the Indian side of the large development effort underway in the Eastern Province.

"With regard to issues relating to fishermen, in view of the humanitarian and livelihood dimensions involved, both sides agreed to put in place practical arrangements to deal with bona fide Indian and Sri Lankan fishermen crossing the International Maritime Boundary Line and to continue discussions on the proposed MOU on development and cooperation in the field of fisheries.

Discussions in New Delhi during Mr. Rajapaksa's visit were characterized by a spirit of constructive engagement on both sides. Both Governments will remain in close touch."

Tamil activists argue that Tamil Nadu can exert only so much of influence within the Indian political matrix, and the momentum created by the political campaigns in Tamil Nadu must be maintained by lobby at the New Delhi level. While continuing to ensure that the interests of Tamil Nadu on the continuing crisis in Sri Lanka are sustained, we need to take the Tamil national question beyond Tamil Nadu to Delhi where the crisis must be addressed. All energies should be directed to force policy shifts both in India and Sri Lanka on the Tamil national question.

# News Track

● **Environmental justice denied to minorities in Sri Lanka:** The Tamil speaking minorities and people with low income are reported to have less access to clean water and sanitation, and are at greater risk of exposure to environmental hazards than the majority and the economically well-off communities. Environmental laws are not equally applied, and these communities suffer from lack of access to information, participation in decision making, and justice in matters related to the environment. The social and human rights activists are calling for an end to environmental discrimination.

● **Kilinochchi medical sector appeals for help:** The Kilinochchi Medical Association (KMA), in a letter to the Government Medical Officers' Association (GMOA) Colombo has appealed for assistance to deal with the humanitarian crisis following military offensive in the LTTE controlled areas of Vanni. The communication states that the displacement has caused a major challenge to the medical sector which is running with limited cadre and in the face of air attacks on hospital facilities, to deal with huge number of children with dysentery and gastro-enteritis.

The letter further adds that in order to save valuable medical equipment from attacks and to provide medical assistance to the displaced population, they have decided to move part of the Kilinochchi Hospital to a government school - Visuvamadu Maha Vidyalayam - and to a peripheral unit at Tharmapuram.

The KMA appeal requests the GMOA to address two issues: a) to help the IDP families to resettle outside the school premises; and (b) help to facilitate the school administration to continue the functions of these schools without interruption.

The letter also stresses as follows: "As we are doctors representing the Sri Lankan Government in the health sector, it is our responsibility to look after innocent Sri Lankan citizens of these areas and we believe that we have the right to demand our government on behalf of our people".

● **Sinhalization of the East:** The Coalition of Tamils and Muslims in the Eastern Region (CMTPC) continue to express its concerns over government policies aimed to redefine geographies and demographics of the region. The organization says that the current government policy is setting a dangerous precedence in the Sri Lankan conflict and would impact on the people's ability to engage in social and political organisation, and would make serious inroads into their economic existence.

The new flag for the Eastern Province, introduced by the government, displays three animals: a lion symbolizing the Amparai district, an eagle for Trincomalee and a fish for Batticaloa. Batticaloa has long called itself the land of the "singing" fish, but the reasons for choosing an eagle for Trincomalee is unclear. The use of the Sinhala lion to represent the Muslim dominated Amparai district seems to have a motive: erasing the Muslim presence in the east. The introduction of the symbols shows the realities that the minorities face in Sri Lanka. The government's programme of wiping out their cultural identities is in place in the East.

● **Freedom of Expression:** Following its third visit to Sri Lanka between 25-29 October, the International Federation of Journalists (IFJ) has expressed concern over the deterioration in the human rights situation for the journalists. According to IFJ, the most serious developments has been the use of terrorism legislation, for the first time in the democratic world, to punish journalists purely for what they have written. J.S. Tissainayagam, B. Jasiharan and V. Valarmathy have been detained since March 2008 and in the case of the first-named, the Prevention of Terrorism Act (PTA) was invoked well after the period of three months stipulated for bringing charges.

The Federation has also placed on record its concern over the dangerous precedent the prosecution of Tissainayagam, Jasiharan and Valarmathy sets for all media nationally and internationally. It has held that these detentions are a gross violation of the public right to know and the accepted norm that media sources should be protected. It further added that the media in the North and East of the country suffer from the worst forms of insecurity.

Quite apart from the threats to the life and liberty of media personnel, the IFJ mission found evidence of a legislative effort to curb media independence. Media rules gazetted on 10 October 2008 by the Sri Lankan government provide for a number of contingencies under which broadcasting licences could be cancelled, including seven different grounds related to broadcast content. Broadcast channels will now have to apply annually for licence renewal.

The mission also placed on record its dismay at the repeated instances of elected representatives and high officials of the government using violence and inflammatory language against media workers and institutions. The mission found that state-owned media, including the website of the Ministry of Defence, have contributed to the vilification of the independent media. Such actions were quite transparently, aimed at discrediting independent media. They contributed to a climate of intolerance and hostility towards media institutions perceived to be independent, posing a clear and present danger to the lives and safety of journalists.

● **Need to protect migrant workers:** At a meeting organized by the UNDP Regional Centre, Colombo on "Women migrants and HIV: from Asia to the Arab States", a panel experts present said, "There is an urgent need to address the HIV vulnerabilities of Asian migrant women in Arab countries so that the economic gains of the countries of origin and host countries, as well as the health and rights of the migrant women are protected. According to the experts, while the migrant workers generated substantial benefits to their countries of origin as well as the host countries, a large number of them are vulnerable to HIV because of the unsafe conditions under which they migrate and live.

Ms Thishanthi Mestiyage presenting her paper on "Sri Lankan women migrant workers and some critical issues related to their migration", at the Tamil Women Development Forum's Gender Conference in May 2008 in London said that in the year 2000, it was estimated there were 858,000 migrants from Sri Lanka and amongst them 590,420 are women migrant workers from rural areas, married and have small children. Of these migrant women, 85% are between the age group of 20-35. This number according to her had increased substantially due to poverty and continuing armed conflict. It should be noted that substantial numbers of them are from the northeast Tamil homeland.

பத்திரிகையாளர்கள், ஆய்வாளர்கள், பல்துறை அறிஞர்கள், சமூகத் தொண்டர்களை உள்ளடக்கிய ஒரு சுயேட்சைக் குழுவின் படைப்பு

மீட்சி

வெளியீட்டாளர்:
Tamil Information Centre (TIC), THULASI, Bridge End Close, Kingston Upon Thames KT2 6PZ
Tel: 0208 546 1560 Email: info.tic@sangu.org

Project Management, Design, Printing and Distribution Kaalai Kathir (Sooryan Publishing Ltd), Tel. 0208 432 2834

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்